**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் மின் கட்டணம் உயரப் போகிறது என்று பத்திரிகைகளிலே வந்துள்ள செய்திகளின் அடிப்படையில், அவர்களும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டதைப்போல இங்கே குறிப்பிடுகிறார்கள். மின் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு ஒரு குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது. அது தன்னிச்சையாக இயங்கக்கூடிய குழு. ஆனால், அந்தக் குழுவிற்கு இங்குள்ள மின் வாரியத்தின் சார்பாகப் பரிந்துரைகளை அனுப்ப முடியும். எந்த அளவிற்குக் கட்டணங்களை நிர்ணயிக்கலாம் என்ற பரிந்துரையை ஏற்கெனவே இங்குள்ள மின் வாரியம் அனுப்பியிருக்கிறது.

நான் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். யாரும் பீதியடையத் தேவையில்லை. தாங்கக்கூடியவர்களுக்குத்தான் மின் கட்டணத்திலே ஒரு சிறிய உயர்வு இருக்குமேயல்லாமல், சாதாரணமானவர்களுக்கு, குறிப்பாக, சிறப்பாக, சாதாரண வீடுகளுக்கு நிச்சயமாக மின் வாரியம் கட்டண உயர்வை சிபாரிசு செய்யவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வதந்திகளை நம்ப வேண்டாமென்று அம்மையார் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பதில் ஒரு நிறைவான நிலையை உருவாக்கியிருக்கின்றது. அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பத்திரிகைகளில் வருவதைப் பார்த்துத்தான் நாங்களும் கேட்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆகவே, அது போலியா அல்லது உண்மையா என்பதை நீங்கள் சொன்னதிலிருந்து நாங்கள் தெரிந்துகொள்கின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றதற்காக மீண்டும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களின் எழுத்தறிவு 50 சதவீதம் குறைவாக உள்ள மாவட்டங்களில், "படிக்கும் பாரதம்" என்னும் புதிய திட்டத்தை மைய அரசு அறிவித்து நிதி ஒதுக்கீடு செய்ததுடன், மாநில அரசின் நிதி ஒதுக்கீடும் சேர்ந்து, நான்கு மாவட்டங்களுக்கு ரூ.68 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்பட இருப்பது மகிழ்ச்சியடையச்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ** என்று சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை ** என்று சொன்ன வார்த்தையைத்தான் நீக்கச் சொல்லியிருக்கிறேன். அது நீங்கள் direct—accusation—ஆகச் சொன்னது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபை 5 ஆம் தேதி ஆரம்பித்தது. அன்றிலிருந்து எல்லோரும் **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்பது இந்த அவைக்கு ஏற்புடைய வார்த்தை அல்ல.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** விடுங்கள் அதை. சொல்ல வேண்டாமென்று சொன்னால், சொல்லவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுகின்ற விளக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். பொய் என்ற சொல் இங்கே சொல்லக்கூடாது என்பதல்ல. பொய்யாமை என்றோ, பொய் என்றோ வள்ளுவர் சொன்ன திருக்குறளையே சொல்லலாம். ஆனால், ** என்று சொல்லக்கூடாது. அப்படிச் சொல்வது சட்டமன்றத்தை கேவலப்படுத்துவதாகும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் சொன்னதைத்தான் நான் சொன்னேன். 50 இலட்சம் ஏக்கர் என்னிடம் இருக்கிறது. நிலமற்ற ஏழையெளியோருக்கு, அனைவருக்கும் 2 ஏக்கர் நிலம் பிரித்துக் கொடுப்பேன் என்று நீங்கள் சொன்னீர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப இந்தக் குற்றச்சாட்டை எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் அதிலும் குறிப்பாக நம்முடைய எதிர்க்கட்சியினுடைய தலைவராகவும், இடையிலே முதலமைச்சராகவும், இன்று எதிர்க்கட்சியின் துணைத் தலைவராகவும் இருக்கின்ற திரு. பன்னீர்செல்வம் அவர்கள் சொல்வதுதான் வேடிக்கையாகவும், விந்தையாகவும் இருக்கிறது. இங்கே ஒவ்வொருவருக்கும் 2 ஏக்கர் நிலம் தரப்படும், ஏழையெளிய விவசாயிகளுக்கு என்று அறிவிக்கப்பட்டது. அந்த நேரத்தில் 50 லட்சம் ஏக்கர் நிலம் இருப்பதாக நாங்கள் சொன்னதாகக்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கூறுகிறார்கள். நாங்கள், அதற்கு முன்பே இங்கே அ.தி.மு.க. அரசின் சார்பாக வைக்கப்பட்ட அறிக்கையில் சொல்லப்பட்ட அந்த நிலப் பரப்பைத்தான் குறிப்பிட்டோமே தவிர, நாங்களாகக் கற்பனை செய்து குறிப்பிடவில்லை. அது ஏளனத்திற்கும், கேலிக்கும் உரியதாக இருக்குமேயானால், அதற்குரியவர்கள் இன்றைய எதிர்க்கட்சிக்காரர்களேயல்லாமல், திராவிட முன்னேற்றக் கழக அரசு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் எவ்வளவு தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பது குறித்த விவரங்களை, வெள்ளை அறிக்கையாக வைக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கேட்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இந்த அவையிலே ஒப்புக்கொண்டார்கள்; அப்படிப்பட்ட வெள்ளை அறிக்கையில் எவ்வளவு தரிசு நிலங்கள் இருக்கின்றன என்ற விவரங்கள் தெரிந்தால், உண்மை என்ன என்பது தெரியவரும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கெனவே விவாதம் எழுந்து, நான் இந்தத் திட்டத்தைத் தமிழகத்திலே நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு, இந்த நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதிலே முன்னணியிலே இருப்பதாகச் சொல்லப்படுகின்ற தீவிரமாக இருப்பதாகச் சொல்லப்படுகின்ற, புரட்சிகரமாக நடைமுறைப்படுத்துவதாகச் சொல்லப்படுகின்ற மேற்கு வங்கத்திற்கு நம்முடைய அமைச்சர் அவர்களையும் வேறு சில நண்பர்களையும் அனுப்பி, அதுபற்றிய தகவல்களை அறிந்து வருமாறு கேட்டிருந்தேன்.

அவர்கள் சென்று சந்தித்தது சாதாரணமானவர்களை அல்ல; அங்குள்ள அரசு அலுவலாளர்களை, அரசுப் பிரதிநிதிகளைச்

சந்தித்து அவர்கள் கேட்டறிந்த விவரம், நாம் இங்கே பிரித்துக் கொடுத்த நிலங்களைவிடக் குறைவானவைதான் மேற்கு வங்கத்திலே என்பதைக் குறிப்பிட்டார்கள். இதை நான் அப்போதே இந்த அவையிலேயே சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றேன்.

முற்பகல் 11–10

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்த விவாதத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு விளக்கத்தையே இங்கே அளித்தார்கள். அதாவது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 50 இலட்சம் ஏக்கர் நிலங்களை, அரசு, தனியார் தரிசு நிலங்களை மேம்படுத்தி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்குவோம் என்றுதான் சொன்னார்களேயொழிய, 50 இலட்சம் ஏக்கர் அரசு நிலம் இருக்கிறது; அரசு தரிசு நிலம் இருக்கின்றது; *அதை நாங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப எதிர்க்கட்சித் துணைத் தலைவரிடத்திலே நான் வாதாடி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. இருந்தாலும், அவர் சொன்ன அந்த வாதத்திற்கு அடிப்படையாக எந்த ஆதாரமும் இல்லை என்பதற்கு ஒரேயொரு உதாரணத்தை மாத்திரம் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன்.

2001–2002 ஆம் ஆண்டு, நிதி மற்றும் சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய நிதிநிலை அறிக்கை உரையில் இருக்கின்ற அந்த வார்த்தையை அப்படியே படிக்கின்றேன்.

'பயிர் செய்ய ஏற்ற 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை வரும் 5 ஆண்டுக் காலத்திற்குள் மேம்படுத்தி, செல்வி ஜெயலலிதா

அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற மிகப் பெரிய அளவிலான தொலைநோக்குத் திட்டத்தை அறிவித்துள்ளார்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'மேம்படுத்துவது' என்றால் என்ன? 'பயிர் செய்ய ஏற்ற' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். பயிர் செய்ய ஏற்ற 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலம்—ஆக, பயிர் செய்ய ஏற்ற என்றால் அது என்ன அர்த்தம், கரடு முரடா? காட்டு நிலங்களா? மேட்டு நிலங்களா? தரிசு நிலங்களா—ஆனால், அவை பயிர் செய்ய ஏற்ற நிலங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய, படித்துக் காட்டிய அந்த உரையில்கூட அரசு நிலம் என்று அதில் குறிப்பிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* சரி, இத்தோடு அந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்ளலாம். இருந்தாலும் உங்களுடைய ஆளுநர் உரையில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதைப்போல 50 இலட்சம் ஏக்கர் நிலத்தை, தரிசு நிலத்தை மீட்டுத் தருவதாகச் சொன்னீர்களே? எவ்வளவு மீட்டுக் கொடுத்திருக்கிறீர்கள்? அப்போது, ஜெட்ரோஃபா என்பதை வைக்கப் போகிறோம் என்று சொல்லி, ஒரு சிலருக்கு 2,000 ஏக்கர், 4,000 ஏக்கர் என்று கொடுத்தீர்கள். அப்போது திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் எல்லாம்கூட, இதே சபையிலே கேட்டார்கள். அதை ஏழை எளியோருக்கு ஒன்றரை ஏக்கர், இரண்டரை ஏக்கராகப் பிரித்துக் கொடுக்க வேண்டுமே தவிர, தனிப்பட்ட பணக்காரர்களுக்குக் கொடுப்பதற்காகத்தான் நீங்கள் இந்தத் தரிசு நிலத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று அப்போதே இதே மன்றத்திலேயே அவர்களும், பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும், நாங்களும் சேர்ந்து சொல்லியிருக்கிறோம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஆகவே, அந்த அடிப்படையில் பணக்காரர்களுக்கு நீங்கள் கொடுப்பதற்காகக் கொண்டுவந்த திட்டத்தை மாற்றியமைத்து, ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் கொடுக்க வேண்டுமென்ற பெரிய மனதோடு செயல்படுத்திய திட்டம்தான், கலைஞர் அவர்களுடைய இந்தத் திட்டம். *(குறுக்கீடுகள்)*